# 4

# தைரியமற்ற சீடன்

The Courageless Disciple

### *முகவுரை*

வேதப்பகுதி: மத் 26:69-75

I — சாதாரண மறுதலிப்பு (வச 70)
II — சத்தியம்பண்ணி மறுதலிப்பு (வச 72)
III — சபித்து மறுதலிப்பு (வச 74)

*சீமோன்* (கிரேக்கு) = கேட்பது ← முதல் பெயர்
*பேதுரு* (கிரேக்கு) = கல் ← துணைப் பெயர்
*கேபா* (அரேமியம்) = பாறை

**பேதுருவின்** வாழ்க்கையைப் படிப்பது எவருக்கும் ஊக்குவிப்பு!

ஊசலாடிக்கொண்டிருந்த மீனவர்
உறுதியானதோர் அப்போஸ்தலர் ஆனார்.

மணல் போலிருந்த தைரியமற்ற சீடன்
மலை போன்ற பாறையானார்.

பின்மாறியுள்ள நண்பரே,
பேதுரு திரும்பி வந்ததிலிருந்து நம்பிக்கை பெறுங்கள்.
தைரியமற்ற இச்சீடன்மீது இயேசுவுக்குத் தனிக் கவனம்
(மாற் 16:6,7)

பாடுகளின் வாரத்தில் பேதுரு செய்த யாவும் **பயத்தினாலேயே** —
எ.கா.) ஒருவனது காதை வெட்டியது!
யோ 18:10,11 — பிரதான ஆசாரியனின் வேலைக்காரன் —
பாவப்பட்ட கோயில்குட்டி!

அந்தக் கோயில்குட்டியின் இனத்தான் பேதுருவை
அச்சுறுத்தினான் —
யோ 18:26 … *உன்னை அவருடன் காணவில்லையா?*

பேதுருவின் வாழ்வில் நிகழ்ந்த விந்தை மாற்றம் அவரது நிருபங்களில்
பிரதிபலிக்கிறது —



### *தைரியமாயிருக்கவேண்டிய மூன்று பகுதிகள் —*

### *1. கிறிஸ்துவுக்குச் சாட்சி பகரத் தைரியம்*

1 பேது 2:9 … ராஜரீகச் செய்தியைப் பறைசாற்ற ராஜரீக ஆசாரியர்.
(On **H**is **M**ajesty's **S**ervice)

ஒரு மீனவர் அரண்மனை வார்த்தைகளைப் பேசுகிறார்!

விசுவாசியே, நீ யார்?

- *தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி* — ஆபிரகாமின் மாம்சீக வழித்தோன்றலல்ல.
- *இராஜரீக ஆசாரியக் கூட்டம்* — பழைய உடன்படிக்கை/ புதிய உடன்படிக்கை
- *எல்லாரும் குருக்கள்!* (= ஆசாரியர்) — குருக்களல்லாதோர் புதிய ஏற்பாட்டில் கிடையாது.
- *பரிசுத்த இனம்* — இஸ்ரவேலர் மட்டுமல்ல
- *அவரது சொந்த ஜனம்* — VIP அல்ல, VVIP!

3:15 … எப்பொழுது ஆயத்தமுள்ள சாட்சிகள்.
4:10,11 … ஒவ்வொருவருக்கும் வரம் உண்டு.
*தேவனுடைய ''வாக்கியங்களின்படி''* (வாக்கியங்கள் போல்!)
= கெம்பீரமான செய்தி
*''வல்லமை''* = ஏகாதிபத்தியம்

பெந்தெகொஸ்தேக்குப் பிறகு பேதுரு —

அப் 2:14 … *தனது சத்தத்தை ''உயர்த்தி'' …*
3:6 … *என்னிடம் ''உள்ளதை'' உனக்குத் தருகிறேன்*
(40 வயதுள்ளவனைத் தூக்கிவிட்ட அவரது தைரியம்!)
4:13 … *பேதுரு, யோவானின் ''தைரியம்''*
*''கல்லாதவர் … பயிற்சியில்லாதவர்''*
ஆனால் அபிஷேகிக்கப்பட்டவர்கள்!

இன்று நமக்குப் பட்டமளிப்பு உண்டு, பட்டம் உண்டு,
அபிஷேகம் எங்கே?

4:20 … *நாங்கள் பேசாமல் இருக்கக்கூடாது!*
5:29,30 … *மனிதருக்கல்ல, தேவனுக்கே கீழ்ப்படிவோம்!*

## *2. துர்வுபதேசக்காரரை எதிர்க்கத் தைரியம்*

சத்தியத்திற்குத் **துணையாக** மட்டுமல்ல,
சத்தியமற்றதற்கு **எதிராகவும்** நிற்கவேண்டும்.

2 பேது 1:19-21 ... *வேதமானது சுய தோற்றமுள்ளது அல்ல*

பைபிளில் தேவனுடைய வார்த்தை அடங்கியிருக்கிறது ✗
பைபிளே தேவனுடைய வார்த்தைதான் ✓

2:1-3 ... *கள்ளப் போதகர் ... ''ஆண்டவரை மறுதலித்து''*
— அதாவது, பல வழிகளில் கிறிஸ்துவும் ஒரு வழி என்பர்.
*''அநேகர்'' அவர்களைப் பின்பற்றுவர்!*

''*பொல்லா இவ்வுலகில் சிறுபான்மையினரிடமே சத்தியம் இருக்கும்*''
— C.H. ஸ்பர்ஜன்

3:3,4,16

*பரியாசக்காரர்* — இரண்டாம் வருகையைக் கேள்வி கேட்பர்
*வேதப் புரட்டர்* — எ.கா.) திருமறையிலுள்ள அற்புதங்களை மறுதலிப்பர்

''நல்ல மனிதர் சும்மா இருந்தால் போதும்; தீமை தலைதூக்கிவிடும்''

''நான் கோழைத்தனமாயிருக்கமாட்டேன்;
எனது தேவனும் இரட்சகருமானவர் பழிக்கப்படுகிறாரே!''
— C.T. ஸ்டட்

''தனது எஜமான் தாக்கப்பட்டால் நாய் குலைக்கும்,
எனது தேவனது சத்தியம் தாக்கப்படும்போது
குரல் கொடுக்காதிருந்தால் நான் ஒரு கோழையன்றோ?''
— ஜான் கால்வின்

## *3. பாடுகளையும் சோதனைகளையும் எதிர்கொள்ளத் தைரியம்*

1 பேது 1:6,7 ... *விசுவாசம் ... பொன் ... சோதிக்கப்படுவது*

பொன்னை விலைகொடுத்து வாங்கிவிடலாம்;
விசுவாசத்தையோ பெற்றுக்கொள்ளத்தான் முடியும்!
*''எல்லா மனிதரிடமும் விசுவாசம் இல்லையே!''*
(2 தெச 3:2)



2:21 ... *பாடுகள் ... அடிச்சுவடுகள் ... மாதிரி*

காந்தி விட்டுச் சென்றுவிட்டது தொப்பி (caps);
கிறிஸ்து விட்டுச் சென்றது மாதிரி (steps).

3:14 ... பயமுறுத்தல்களுக்கு அஞ்சாதீர்!

எ.கா.) தானியேல் / தரியு / சிங்கம்
இராஜா / மிருகங்களுக்கு இராஜா
*''நீதிமான் சிங்கம்போல் தைரியமாயிருக்கிறான்''* (நீதி 28:1)

அனனியா, அசரியா, மீஷாவேல்

அக்கினி — தேவன் மீதுள்ள அன்பு அதைவிடப் பெரிய அக்கினி! (உன் 8:6,7).

4ஆம் வாலிபனோடு கைகோர்த்து நடை!

பேதுருவிடம் இயேசு: *''என்னை நேசிக்கிறாயா?''* (யோ 21:15-17)

1 பேது 4:12,13 ... *சோதிக்கும் அக்கினி ... மகிமை*

5:8-10 ... *சிங்கம்போல் பிசாசு ...*
அவன் போலிதான்!

மார்ட்டின் லூத்தர்: ''இந்நகரின் கூரை ஓடுகள் எல்லாம் பிசாசுகளானாலும், இச்சத்தியத்தில்தான் நிற்பேன்!''

J.C. ரைல்: ''பாடுகள் இல்லையேல் பாடல்கள் இல்லை!''

''பரிசுத்தமற்ற இன்பத்தைவிட பரிசுத்தமான இன்னலையே நாடுவேன்!''

பேதுரு ஒரு ''பாறை'' எனப் பெயரிடப்பட்டார்;
அவரோ பெந்தெகொஸ்தேக்குமுன்
ஒரு தடைக்கல்லாயிருந்தார் — பாடுகள் வேண்டாமென்றார்.

இப்பொழுது அவர் மாறிவிட்டார்!
இயேசுவின் அன்பில் மயங்கிவிட்டார்!
*''பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்!''* (1 யோ 4:18)

முடிவாக,

''என்னைத் தலைகீழாய் சிலுவையிலறையுங்கள்''
என்றாராம் பேதுரு.

சீமோன் பேதுருவைக் கிறிஸ்து மாற்றமுடியுமானால்,
என்னையும் மாற்ற முடியும்! ஆமென்!